**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

| | |
|---|---|
| Sessions Case No | SC.No. 37/2022 |
| Primary Register Case No; | |
| Deposition of Witness for | Prosecution PW – 2 |
| | Defence |
| | Court |
| Name | **சடகோபன்** |
| Father's Name | **சிவபிரகாசம்** |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Regligion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 10th day of July 2026.

Signature of Witness

Name of the Interpreter: Tmt. V.Mohana, Head Clerk

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 10th day of July 2026.

Signature of Interpreter

**முதல் விசாரணை**

நான் காஞ்சிபுரம் மாவட்டம் கிளார் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எனக்கும் சம்பவம் குறித்து எந்த விவரமும் தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

கடந்த 21.06.2020 தேதி தானும் தங்கள் ஊரை சேர்ந்த ஸ்ரீதரும் முசரவாக்கம் சாலையில் வேலை செய்து கொண்டிருந்த போது தங்கள் ஊரை சேர்ந்த வேலாயுதமும் புருஷோத்தமனும் பேசிக் கொண்டிருந்ததாகவும் அப்போது ராஜாவைப் பார்த்து வேலாயுதமும் புருஷோத்தமனும் ஏப்பா வேகமாக மோட்டார் சைக்கிளை ஓட்டி வருகிறாய் என்று கேட்டதாகவும் அதற்கு வேலாயுதத்தை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் பேசி ராஜா முதுகின் பின்பக்கம் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து வேலாயுதத்தை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் பசி இத்தோட ஒழிந்து போடா என்று சொல்லி கத்தியால் வெட்ட வந்த போது வேலாயுதம் இடது கையால் தடுத்தாதல் அந்த வெட்டானது வேலாயுததத்தின் இடது கையில் பட்டதாகவும் கையில் ரத்தம் வரவும் வேலாயுதமும் புருஷோத்தமனும் அலறி அடித்துக் கொண்டு ஓட அந்த சாலையில் நடந்து சென்ற புஷ்பராஜ் மற்றும் சேகர் ஆகியோர்கள் ராஜாவை மடக்க ஓடிய போது ராஜா கையில் வைத்திருந்த கத்தியை ரோட்டில் தேய்த்து தீப்பொறி பறக்க செய்து அசிங்கமான வார்த்தைகளால் பேசி யாராவது என்னை பிடிக்க கிட்ட வந்தால் உங்களையும் கத்தியால் வெட்டுவேன் என்று மிரட்டியதாகவும் பன்னர் பெட்ரோல் எடுத்து மோட்டார் சைக்கிள் மீது ஊற்றி பற்ற வைத்து சேதப்படுத்திவிட்டு ராஜா

எடுத்து வந்த மோட்டார் சைக்கிளை எடுத்து கொண்டு அங்கிருந்து தப்பி சென்றுவிட்டான் என்றும் உடனே காயம்பட்ட வேலாயுதத்தை புருஷோத்தமன் சிகிக்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றும் இது சம்பந்தமாக வேலாயுதம் பாலுசெட்டி சத்திரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் இது தொடர்பாக காவல் ஆய்வாளர் விசாரணை செய்ததாகவும் போலிசார் விசாரணையில் தெளிவாகசொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் ஆஜர் எதிரியை தெரியாது என்று உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- J.மோகனா,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.